இந்தியா-லெபனான் இடையிலான முதல் வெளியுறவு அலுவலக ஆலோசனைகள்

இந்தியா மற்றும் லெபனான் 2026-ஆம் ஆண்டு நவம்பர் 09-ஆம் தேதியன்று புது தில்லியில் வெளியுறவு அலுவலக ஆலோசனைகளின் (எஃப்ஓசி) 1வது சுற்றை நடத்தின. இந்தியக் குழுவிற்கு வெளியுறவு அமைச்சகத்தின் செயலாளர் (சிபிவி மற்றும் ஓஐஏ) திருமதி ஸ்ரீப்ரியா ரங்கநாதன் அவர்களும், லெபனான் குழுவிற்கு அந்நாட்டின் வெளியுறவு மற்றும் புலம்பெயர்ந்தோர் அமைச்சகத்தின் பொதுச் செயலாளர் திரு. அப்தெல் சத்தார் ஈஸா அவர்களும் தலைமை தாங்கினர்.

2. இந்த விவாதங்கள் இந்தியா-லெபனான் இருதரப்பு உறவுகளின் முழு அளவிலான அம்சங்களையும் மறுஆய்வு செய்தன; மேலும், இரு நாடுகளுக்கும் இடையிலான நிறுவன ரீதியான கட்டமைப்புகளை வலுப்படுத்துவதற்கான புதிய உறுதிப்பாட்டை வெளிப்படுத்தின. இரு தரப்பினரும் பரஸ்பர ஆர்வம் கொண்ட முக்கியமான பிராந்திய விவகாரங்கள் குறித்துத் தங்கள் கருத்துகளைப் பரிமாறிக்கொண்டனர்.

3. இரு நாடுகளும் அரசியல், பொருளாதாரம் மற்றும் கலாச்சாரம் ஆகிய துறைகளில் நெருக்கமான மற்றும் சுமூகமான இருதரப்பு உறவுகளைக் கொண்டுள்ளன. இன்று நடைபெற்ற கலந்துரையாடல்கள் இந்தியா-லெபனான் இருதரப்பு கூட்டாண்மையை மேலும் வலுப்படுத்த உதவும்.

4. இரு தரப்பினரும், தங்களுக்கு வசதியான ஒரு தேதியில் லெபனானில் அடுத்த சுற்று வெளியுறவு அலுவலக ஆலோசனைகளை (எஃப்ஓசி) நடத்த ஒப்புக்கொண்டனர்.

புது தில்லி

நவம்பர் 09, 2026